**செப்டம்பர் - 19**

**"உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்." - யோவா 17 : 17**

நமது கர்த்தர் எப்பொழுதும் நமது ஆவிக்குரிய ஜீவியத்தின் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் நாம் சத்தியத்தை பெற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படிந்திருத்தலுடன் சம்பந்தப்படுத்துகிறார். முதிர்ச்சியடைந்த போதனை என்று உரிமைகொண்டாடுகின்றதொன்று உண்டு. அதில் முன்னேறி இருக்கிற கிறிஸ்தவர்களிடத்தில், கிறிஸ்துவோ, அல்லது பரிசுத்த ஆவியோ தேவனுடைய வார்த்தைக்குப் புறம்பாகத் தன்னிஷ்டமாக அவர்களுடன் பேசுகிறதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் போதனைக்கு தேவனுடைய ஒவ்வொரு பிள்ளையும் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இந்தப் போதனை ஒருவரிடத்தில் ஆவிக்குரிய பெருமையையும், வீம்பு பேசுதலையும், கண்டிப்புகளையும் சக்தியற்றவைகளாக்குகிறது. ஏனென்றால், ஏமாற்றப்பட்டவர்கள் தங்களுக்குள் வாசம் பண்ணுகிற ஒரு மேலான போதகர் இருக்கிறார் என்று எண்ணுகிறார்கள். சாத்தான் இந்த ஏமாற்றத்தை சாதகமாக்கிக்கொண்டு தன்னுடைய சித்தத்தின்படி அவர்களைக் கைதிகளாக நடத்துகிறான். **- Z '03, 377 (R 3250)**

பரிசுத்தமாக்குதல், பாவத்திலிருந்தும், வஞ்சகத்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும், உலகத்தனத்திலிருந்தும் ஒருவரைத் தனிமைப்படுத்தி அந்த ஆளை கர்த்தருடைய ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்கிறது. அது தொடர்ந்து ஒரு வேலை செய்யும் பொழுது நம்முடைய சித்தத்தை செத்ததாக வைத்து, கர்த்தருக்கென்று நம்முடைய சரீரங்களை பலியிட்டு, நம்முடைய குணங்களை அவருடையதைப் போலாக்குகிறது. முதலாவது நம்முடைய இருதயங்களில் ஒரு பிரதிஷ்டை செய்கிற விசுவாசத்தையும், அன்பையும் உண்டுபண்ணி தேவனுடைய வார்த்தை நம்மை பரிசுத்தமாக்குகிறது. இப்படிப்பட்ட புது இருதயத்தையும், மனதையும், சித்தத்தையும் நம்மில் ஆரம்பித்து, நம்முடைய மானிட சித்தத்தை செத்ததாகவும், தேவனுடைய சித்தத்தை நம்மில் ஜீவித்திருக்கிறதாகவும் வைத்துக் கொண்டு, மரணபரியந்தம் பலி செலுத்த நம்மை சாத்தியமாக்க தேவனுடைய வார்த்தை தொடர்ந்து கிரியை நடப்பிக்கிறது. நாம் வளரவும், பெலப்படவும், சமப்படுத்தவும் நமக்கு பெலன் தந்து அது தன் வேலையை தொடர்ந்து செய்கிறது. அது நம்மை பூரணராக்கி அந்த வேலையை முடிக்கிறது. இவை எல்லாம் யேசுவின் ஊழியத்தினால் நடைபெறுகிறது. **- P '35, 117, 118.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**எரே 1:5; அப் 26:17,18; ரோம 15:16; 1கொரி 1:2,30,31; 6:11; கலா 2:20;6:14; எபே 1:3,4; 3:19; 4:7,12-16; 5:25-27; கொலோ 2:11; 1தெச 4:3,4; 5:23; 2தெச 2:13,14; 2தீமோ 2:21; எபி 2:11.**

**கோபுர வாசிப்பு : Z '13, 292 (R 5319).**

**வினாக்கள் : இந்த வசனம் இந்த வாரத்தில் எனக்கு என்னவாயிற்று? எப்படி? எந்தச் சந்தர்ப்பங்களில்? என்ன பலனோடு?**